செ.கு.எண்: 421

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## அறிக்கை – 23.11.2012

சென்னை பெருநகர காவல், எழும்பூர் நவீன கட்டுப்பாட்டு அறையில் காவலராகப் பணிபுரிந்து வந்த திருமதி நந்தினி அவர்கள் 17.11.2012 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், ஓமலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. A.அண்ணாதுரை அவர்கள் 19.11.2012 அன்று தும்பிப்பாடி பவர் ஹவுஸ் அருகில் ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், கள்ளபெரம்பூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. R. ராஜதுரை அவர்கள் 19.11.2012 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. அண்ணாதுரை, தலைமைக் காவலர் திரு. ராஜதுரை மற்றும் காவலர் திருமதி நந்தினி ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலை விபத்தில் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. அண்ணாதுரை, உடல்நலக் குறைவால் காலமான தலைமைக் காவலர் திரு. ராஜதுரை மற்றும் காவலர் திருமதி நந்தினி ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை.